சுருக்கம்

திருநெல்வேலி மாவட்டம், தாமிரபரணி பாசன அமைப்பின் கீழ் கன்னடியன் கால்வாய் மூலம் பயன்பெறும் நிலங்களுக்கு 2007 ஆம் ஆண்டு கார் பருவச பாசனத்திற்கு பாபநாசம், சேர்வலாறு மற்றும் மணிமுத்தாறு நீர்த்தேக்கங்களிலிருந்து தண்ணீர் திறந்து விடுதல் – ஆணை வெளியிடப்படுகிறது

---

பொதுப்பணித் (ப்பி2) துறை

அரசு ஆணை (வாலாயம்) எண்.364 நாள் 26.6.2007

படிக்க

1. தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, பொதுப்பணித் துறை கடிதம் எண். வப/வஅ3/கோ.3599/2007 நாள் 23.6.2007.
2. மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி கடிதம் எண். ந.க.வெ.ஒள.6/823/2007 நாள் 23.6.2007

ஆணை

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட மதுரை மண்டல பொதுப்பணித் துறை நீர்வள ஆதார அமைப்புத் தலைமைப் பொறியாளரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள சூழ்நிலைகளின் அடிப்படையில், அவரது செயற்குறிப்பினை ஏற்று, தாமிரபரணி பாசன அமைப்பின் கீழுள்ள கன்னடியன் கால்வாய் மூலம் பயன் பெறும் நேர்முக மற்றும் மறைமுக பாசனப் பரப்பாகிய 12,500 ஏக்கர் நிலங்களில் கார் சாகுபடி செய்வதற்கு ஏதுவாக பாபநாசம், சேர்வலாறு மற்றும் மணிமுத்தாறு நீர்த்தேக்கங்களிலிருந்து 27.6.2007 முதல் 120 நாட்களுக்கு மொத்தம் 2083.33 மில்லியன் கன அடிக்கு மிகாமல் தண்ணீர் விடுவதற்கு அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ். ஆதிசேஷையா
அரசு செயலாளர்

பெறுநர்

தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு,
பொதுப்பணித் துறை, மதுரை மண்டலம், மதுரை–2,
மாவட்ட ஆட்சியர், திருநெல்வேலி.

நகல்

முதன்மைத் தலைமைப்பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு மற்றும்
தலைமைப் பொறியாளர் (பொது)
பொதுப்பணித் துறை, சென்னை–5.
பொதுப்பணி மற்றும் சட்டத் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக
உதவியாளர்,சென்னை–9.
இயக்குநர், வேளாண்மைத் துறை,சென்னை–5.
இ.கோ./ உ.ந.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.